Under Section 173 BNSS

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8165167

1. District மாவட்டம்: Thiruvallur PS: காவல்நிலையம்: V & AC., Year: ஆண்டு: 2024 FIR No.: மு.த.அ. எண்: 18/AC/2024/TVL Date: நாள்: 24.10.2024 06.00 hrs

2. (i) Act சட்டம்: BNSS., and the Sections பிரிவுகள்: 106 BNSS., &
(ii) Act சட்டம்: Prevention of corruption Sections பிரிவுகள்: Sec 7
(iii) Act சட்டம்: (Amendent) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல்: 23.10.24 17.45 hrs Date to : நாள் வரை 24.10.2024 02.00 hrs.
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.10.2024 Time நேரம் : 05.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 24.10.2024 Time நேரம் : 05.00 hrs & 06.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக by writter

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 25 km, East,
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Poonamallee Municipality, Thiruvallur District.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. J. Sankar (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Spl. Tahsildar Address : முகவரி Special Tahsildar, L.A. Unit IV, Highway, Thiruvallur. I/c District Deputy Inspection cell officer, Thiruvallur & Kanchipuram.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. Tmt. Latha, Commissioner, Poonamallee, Municipality.
2. Tr. N. Kumaravel, Town Planning Inspector, Poonamallee Municipality.
3. Tr. V. Manimaran, Record clerk, Poonamallee Municipality.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
-nil-

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Un accounted & unclaimed amount Rs. 2,00,700/- was Seized during the Joint Surprise check at Poonamallee Municipality.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்படுவது:-

இன்று 24.10.2024 ஆம் தேதி காலை சுமார் 05.00 மணிக்கு காவல் ஆய்வாளர் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு திருவள்ளூர் அவர்கள் என்னை அழைத்து, திரு.ஏ.ஜெ. சிங்கர், தனி வட்டாட்சியர், நில எடுப்பு அலகு-IV, நெடுஞ்சாலை, திருவள்ளூர் மற்றும் மாவட்ட இணை ஆய்வுக்குழு அலுவலர் (ஊழல்) காஞ்சிபுரம் அவர்கள் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொள்ள உத்தரவு அளித்ததன் பேரில் வழக்கு பதிவு செய்த விபரம் பணிவுடன்,

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

(Signature) DDLCO (L) (Signature)

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

S. Mala 24/10/2024
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. Mala
Rank: நிலை Inspector of Police, VAC, Thiruvallur. No. எண்

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.18/AC/2024/TVL U/s. 106 BNSS., r/w. 7 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 Continuous...)**

அனுப்புநர் திரு.ஜெ.சங்கர், தனி வட்டாட்சியர், நில எடுப்பு-அலகு-IV, நெடுஞ்சாலை, திருவள்ளூர்-1 மற்றும் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு), காஞ்சிபுரம், பெறுநர் காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, திருவள்ளூர். ந.க.எண்.208/2024/அ1, நாள்:-24.10.2024. அய்யா, பொருள்:- திடீர் கூட்டாய்வு - திருவள்ளூர் மாவட்ட ஆய்வுக்குழு மற்றும் - ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - பூவிருந்தவல்லி நகராட்சி அலுவலகம் - 23.10.2024-ந்தேதி திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது - தொடர்நடவடிக்கை எடுக்கக்கோரி கடிதம் அளித்தல் சம்மந்தமாக. பார்வை:- திடீர் கூட்டுத்தணிக்கை செயல்முறைகள், நாள்:- 23.10.2024 முதல் 24.10.2024 வரை. திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி நகராட்சி அலுவலகத்திற்கு வரும் பொதுமக்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் மூலம் நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் கையூட்டாக பணம் பெற்று வருவதாக கிடைத்த நம்பகமான ரகசிய தகவலின் அடிப்படையில், இன்று 23.10.2024-ந்தேதி மேற்படி அலுவலகத்தில் இருதுறை திடீர் கூட்டுத்தணிக்கைச் செய்ய மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு) திரு.ஜெ.சங்கர், தனிவட்டாட்சியர், நில எடுப்பு-அலகு-IV, நெடுஞ்சாலை, திருவள்ளூர்-1, மற்றும் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.மு.இ.இராமச்சந்திரமூர்த்தி, காவல் ஆய்வாளர் திருமதி.S.மாலா மற்றும் குழுவினர்கள் இணைந்து இரு துறை திடீர் கூட்டாய்வு 23.10.2024-ஆம்தேதி மாலை சுமார் 5.45 மணி முதல் 24.10.2024-ந்தேதி அதிகாலை சுமார் 02.00 மணி வரை மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் கூட்டுச்சோதனையின்போது பூவிருந்தவல்லி நகராட்சி அலுவலகத்தில் 1)கணக்கெடுப்பு பிரிவு அறையில் கண்டறியப்பட்ட யாரும் உரிமைக்கோராத பணம் ரூ.1,06,000/-, 2)பதிவு அறையில் கண்டறியப்பட்ட யாரும் உரிமைக்கோராத பணம் ரூ.60,000/-, 3)திரு.V.மணிமாறன், ஆவண பதிவறை எழுத்தர் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2,500/-, 4)ஒப்பந்ததாரர் திரு.அனந்தசயனன் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.6,500/-, 5)ஒப்பந்ததாரர் திரு.ராஜேஷ் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.9,500/- 6)திரு.சரவணன் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.5,000/- 7) திரு.ரஞ்சித்குமார் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.7,000/- மற்றும் 8) ஒப்பந்ததாரர் திரு.ஆரோன் சாமுவேல் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.4,200/- ஆக மொத்தம் பணம் ரூ.2,00,700/- சோதனையின்போது விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. 23.10.2024-ஆம்தேதிக்கான கலெக்சன் செய்யப்பட்டதற்கான கணினி பிரிண்ட் அவுட் (5 தாள்கள்), 4 காசோலை நகல்கள் (2 தாள்கள்). 22.10.2024-ம்தேதி போடப்பட்ட பில் எண்கள்.0021846 மற்றும் 0021847 2 தாள்கள்) ஆகியவற்றை நகல் எடுத்து கைப்பற்றப்பட்டது. சோதனையின்போது கைப்பற்றப்பட்ட கணக்கில்

**(FIR content continues to the next page....)**

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.18/AC/2024/TVL U/s 106 BNSS., r/w. 7 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 Continuous...)**

வராத மற்றும் உரிமைகோராத பணம் ரூ.2,00,700/- (500x398=1,99,000/-, 200x7=1,400/-, 100x2=200/- & 50X2=100/-)-ஐ பொதுமக்களிடமிருந்து பெற்ற லஞ்சம் பணம் என முடிவு செய்து அது தொடர்பான நபர்களுக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ள தங்களிடம் ஒப்படைக்கிறேன். கையொப்பம் ஜெ.சங்கர், தனி வட்டாட்சியர், நில எடுப்பு-அலகு-IV, நெடுஞ்சாலை, திருவள்ளூர்-1 மற்றும் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு), காஞ்சிபுரம், இணைப்பு - 1)ரொக்கம் ரூ.2,00,700/- (இரண்டு லட்சத்து எழுநூறு ரூபாய்), 2)செயல்முறை ஆணை அசல். 3) பணம் கைப்பற்றப்பட்ட நபர்கள் மற்றும் அலுவலர்களின் விளக்கக்கடிதங்கள் 4) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் (4) மற்றும் அலுவலகத்தின் பதிவேடுகள் மற்றும் ஆவணங்களின் சான்றொப்பமிட்ட நகல்கள். மேலும் பூவிருந்தமல்லி நகராட்சி அலுவலகத்தில் திடீர் கூட்டுத்தணிக்கையின்போது மாவட்ட துணை ஆய்வக்குழு அலுவலரால் தயார் செய்யப்பட்ட செயல்முறையின் விவரம் வருமாறு- திருவள்ளூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (இருப்பு) காஞ்சிபுரம் அவர்களின் இரு துறை திடீர் கூட்டாய்வு குறித்த செயல்முறைகள். முன்னிலை:-திரு.J.சங்கர், ந.க.எண்.208/2024/அ1, நாள்:-23.10.2024. பொருள்:- திடீர் கூட்டாய்வு - திருவள்ளூர் மாவட்ட ஆய்வுக்குழு மற்றும் - ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - பூவிருந்தமல்லி - நகராட்சி அலுவலகம் - 23.10.2024-ந்தேதி திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது - தொடர்பான- செயல்முறைகள். ஆணை:- திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி நகராட்சி அலுவலகத்திற்கு வரும் பொதுமக்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் மூலம் நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் கையூட்டாக பணம் பெற்று வருவதாக கிடைத்த நம்பகமான ரகசிய தகவலின் அடிப்படையில், இன்று 23.10.2024-ந்தேதி மேற்படி அலுவலகத்தில் இருதுறை திடீர் கூட்டுத்தணிக்கைச் செய்ய மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு) திரு.ஜெ.சங்கர், தனிவட்டாட்சியர், நில எடுப்பு-அலகு-IV, நெடுஞ்சாலை, திருவள்ளூர்-1, மற்றும் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.மு.இ.இராமச்சந்திரமூர்த்தி, காவல் ஆய்வாளர் திருமதி.S.மாலா மற்றும் குழுவினர்கள் இணைந்து இரு துறை திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது. இன்று 23.10.2024-ந்தேதி மதியம் சுமார் 2.30 மணிக்கு திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்திலிருந்து அரசு வாகனத்தில் புறப்பட்டு மதியம் சுமார் 3 மணிக்கு பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள பூவிருந்தவல்லி நகராட்சி அலுவலகத்திற்கு அருகில் வந்து வாகனத்தை நிறுத்திவிட்டு இறங்கி நடந்து சென்று, ஆங்காங்கே குழுவினருடன் நகராட்சி அலுவலகத்தை கண்காணித்துக்கொண்டிருந்தபோது, மேற்படி நகராட்சி அலுவலகத்தில் பொதுமக்கள் உள்ளே சென்று வேலைகளை முடித்து அலுவலகத்திற்கு சென்று வருவதும்

**(FIR content continues to the next page....)**

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.18/AC/2024/TVL U/s. 106 BNSS., r/w. 7 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 Continuous...)**

போவதுமாக இருந்தார்கள். அப்போது மாலை சுமார் 5.45 மணியளவில் பூவிருந்தவல்லி நகராட்சி அலுவலகத்திற்குள்ளே குழுவினருடன் சென்றோம். அந்த அலுவலகத்தில் முதல் மாடியில் அமைந்துள் நகராட்சி ஆணையர் திருமதிலதா அவர்கள் பணியில் இருந்தார். அவரிடம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான் நகராட்சி ஆணையரிடம் என்னை அறிமுகம் செய்துக்கொண்டும், காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் திருவள்ளூர் விஜிலென்ஸ் பார்ட்டிகளையும் அறிமுகம் செய்து வைத்து, திடீர் கூட்டுத்தணிக்கை செய்ய வந்துள்ளதாக கூறி அனைவரையும் சோதனை செய்ய ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. மேற்படி அலுவலகமானது, தரைத்தளத்துடன் கூடிய இரண்டு மாடிகளை கொண்டதாக இருந்தது. அதில் தரைத்தளத்தில் அலுவலக போர்டிக்கோவில் நகராட்சி ஆணையரின் அலுவலக வாகனமான Bolero TN 11 AG 0006 நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதன் ஓட்டுநர் திரு.தனசேகரன் வாகனத்திற்கு அருகில் நின்றுக்கொண்டிருந்தார். மேற்படி வாகனத்தை தணிக்கை செய்ய கைப்பற்றும்படியான பணமோ அல்லது ஆவணங்களோ ஏதுவுமில்லை. ஓட்டுநர் திரு.தனசேகர் அவர்களை சோதனை செய்ய அவர் வைத்திருந்த பர்ஸ்சில் ரூ.2,400/- காணப்பட்டது. அது குறித்து கேட்க அவர் இன்று காலை பணிக்கு வரும்போதே மேற்படி பணத்தை கை செலவுக்காக எடுத்து வந்ததாக தெரிவித்தார். மேற்படி பணத்தை அவரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அலுவலக கார் பார்கிங்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த Maruti Swift TN 20 DE 5987 அதன் ஓட்டுநர் திரு.செல்வம் என்பவரை விசாரிக்க, அவர் மேற்படி வாகனத்தின் தனியார் ஓட்டுநர் என்றும், வாகனத்தின் உரிமையாளர் திரு.N.குமரவேல், நகரமைப்பு ஆய்வாளர் (Town Planning Inspector) அவர்களுக்கு தனியார் ஓட்டுநராக இருப்பதாக தெரிவித்தார். மேற்படி வாகனத்தை தணிக்கை செய்ய கைப்பற்றும்படியான பணமோ அல்லது ஆவணங்களோ ஏதுவுமில்லை. ஓட்டுநர் திரு.செல்வம் அவர்களை சோதனை செய்ய அவர் வைத்திருந்த பர்ஸ்சில் ரூ.810/- காணப்பட்டது. அது குறித்து கேட்க அவர் இன்று காலை பணிக்கு வரும்போதே மேற்படி பணத்தை கை செலவுக்காக எடுத்து வந்ததாக தெரிவித்தார். மேற்படி பணத்தை அவரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. தரைத்தளத்தில் உள்ள வரவேற்பு மேஜையின் அருகில் அமர்ந்திருந்த அலுவலக உதவியாளர் திரு.A.பிரேம்குமார் அவர்களை சோதனை செய்ய அவரிடம் ரூ.15/- காணப்பட்டது. அது குறித்து கேட்க அவர் இன்று காலை பணிக்கு வரும்போதே மேற்படி பணத்தை கை செலவுக்காக எடுத்து வந்ததாக தெரிவித்தார். மேற்படி பணத்தை அவரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. தரைத்தளத்திற்கு வலதுப்புறத்தில் வரி வசூல் செய்யும் கவுண்டர்

**(FIR content continues to the next page....)**

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.18/AC/2024/TVL U/s 106 BNSS., r/w. 7 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 Continuous...)**

உள்ளது. அங்கு இளநிலை உதவியாளர் திருமதி.சிவகாமி என்பவர் பணியில் இருந்தார். அவர் இன்று 23.10.2024 அன்று காலை பணிக்கு வந்தது முதல் இருத்துறை கூட்டுத்தணிக்கை துவங்கும்வரை வசூல் செய்த தொகை அவர் கொடுத் ரசீதுகளுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது. அவர் இன்று மொத்தம் 42 பில்கள் மூலம் ரூ.2,89,962/- ரூபாய் வசூல் செய்துள்ளார். அதில் பணமாக ரூ.2,15,325/-ம், காசோலையாக ரூ.74,637/-ம் காணப்பட்டது. அவரால் வசூல் செய்யப்பட்டிருந்த பணத்தினை எண்ணிப்பார்க்க ரூ.1,75,645/- இருந்தது. வசூல் செய்யப்பட்ட மொத்த தொகையிலிருந்து ரூ.39,680/- குறைவாக இருந்தது. இது குறித்து அவரிடம் விளக்கம் கேட்க நேற்று 22.10.2024-ம்தேதி அன்று ரூ.43,270/-க்கு இரண்டு ரசீதுகள் போட்டுள்ளதாகவும், அதற்குறிய பணம் இன்னும் வரவில்லை என்றும், எனவே நேற்றைய கலெக்சன் தொகையை வங்கியில் இன்று செலுத்துவதற்காக அனுப்பும்போது, தன்னுடைய சொந்த பணம் ரூ.3,610/-ம், இன்றைய கலெக்சன் தொகையிலிருந்து ரூ.39,680/-யை எடுத்து கொடுத்து விட்டதாக திருமதி.சிவகாமி கூறினார். மேற்படி வரவேண்டிய தொகைக்கான பில் இரண்டையும் சரிப்பார்க்க அவை பில் எண்.0021846 ரூ.21,645/- என்றும், பில் எண்.0021847க்கான பில் தொகை ரூ.21.645/- என்று உள்ளது. இவை இரண்டையும் சேர்த்து ரூ.43.270/- சரியாக உள்ளது என்று ஊர்ஜிதம் செய்து அவரிடமே பணம் ரூ.1,75,645/-, நான்கு காசோலைகள் மற்றும் இரண்டு ரசீதுகள் திருப்பி வழங்கப்பட்டு, அவற்றை முறையாக அரசு கணக்கில் செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டது. இது தொடர்பாக இன்று 23.10.2024-ஆம்தேதிக்கான கலெக்சன் செய்யப்பட்டதற்கான கணிணி பிரிண்ட் அவுட் (5 தாள்கள்), 4 காசோலை நகல்கள் (2 தாள்கள்), நேற்று 22.10.2024-ம்தேதி போடப்பட்ட பில் எண்கள்.0021846 மற்றும் 0021847 (2 தாள்கள்) ஆகியற்றை இளநிலை உதவியாளர் (காசாளர்) திருமதி.சிவகாமி அவர்களிடம் கைப்பற்றப்பட்டது. 4 அசல் காசோலைகள் மற்றும் அசல் பில் எண்கள்.0021846 மற்றும் 0021847 ஆகியவற்றை உரிய நடவடிக்கைக்காக இளநிலை உதவியாளர் (காசாளர்) திருமதி.சிவகாமி அவர்களிடம ஒப்படைக்கப்பட்டது. அதற்கு அடுத்து அறையில் இருந்த Data Entry Operator பணியில் இருந்த M/s. Traid infratech நிறுவனத்தின் பணியாளர் திரு.ராகுல் என்பவரை விசாரணை செய்ய அவர் இந்த அலுவலகத்தில் பிறப்பு இறப்பு ஆகியவற்றை பதிவு செய்துவரும் பணியினை Outsourcing மூலம் செய்து வருவதாக தெரிவித்தார். அவரது அறையில் சோதனை செய்தபோது கைப்பற்றக்கூடிய பணமோ அல்லது ஆவணங்களோ எதுவும் இல்லை. மேலும் அவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.1,400/- காணப்பட்டது. அது குறித்து அவரிடம் கேட்க,

**(FIR content continues to the next page....)**

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.18/AC/2024/TVL U/s. 106 BNSS., r/w. 7 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 Continuous...)**

அவர் இன்று பணிக்கு வரும்போது செலவுக்காக வீட்டிலிருந்து எடுத்து வந்ததாக கூறினார். எனவே. அப்பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அந்த அலுவலகத்தின் முதல் மாடியில் இடதுப்புறம் உள்ள முதல் அறையானது, சுகாதார பிரிவு அறையில் சுகாதார அலுவலர் திரு.R.K.கோவிந்தராஜ் அவர்கள் பணியில் இருந்தார். அந்த அறையை சோதனை செய்தபோது, கைப்பற்றக்கூடிய பணமோ அல்லது ஆவணங்களோ எதுவும் இல்லை. மேலும் அவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.500/- காணப்பட்டது. அது குறித்து அவரிடம் கேட்க, அவர் இன்று பணிக்கு வரும்போது செலவுக்காக வீட்டிலிருந்து எடுத்து வந்ததாக கூறினார். எனவே. அப்பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அந்த அறையில் திரு.பிரபு, உதவியாளர் அவர்களை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.200/- இருந்தது. அது குறித்து அவரிடம் கேட்க, அவர் இன்று பணிக்கு வரும்போது செலவுக்காக வீட்டிலிருந்து எடுத்து வந்ததாக கூறினார். எனவே. அப்பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திரு.சாமுவேல் நெல்சன், களப்பணி உதவியாளர் அவர்களை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.800/- இருந்தது. அது குறித்து அவரிடம் கேட்க, அவர் இன்று பணிக்கு வரும்போது செலவுக்காக வீட்டிலிருந்து எடுத்து வந்ததாக கூறினார். எனவே. அப்பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திரு.இஸ்ரேல், துப்புறவுப்பணி மேற்பார்வையாளர் அவர்களை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.1,600/- இருந்தது. அது குறித்து அவரிடம் கேட்க, அவர் இன்று பணிக்கு வரும்போது செலவுக்காக வீட்டிலிருந்து எடுத்து வந்ததாக கூறினார். எனவே. அப்பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்த அறையான கணிணி அறையில் வருவாய் பிரிவின் நிர்வாக அலுவலர்கள் இருந்தனர். அவர்களில் அ1 பிரிவை கவனித்துவரும் திருமதி.C.விக்டோரியா லாரன்ஸ் அவர்களின் இருக்கையை சோதனை செய்தபோது, கைப்பற்றக்கூடிய பணமோ அல்லது ஆவணங்களோ எதுவும் இல்லை. மேலும் அவரை சோதனை செய்தபோது அவருடைய கைப்பையில் ரூ.660/- காணப்பட்டது. அது குறித்து அவரிடம் கேட்க, அவர் இன்று பணிக்கு வரும்போது செலவுக்காக வீட்டிலிருந்து எடுத்து வந்ததாக கூறினார். எனவே. அப்பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அந்த அறையில் அ1 பிரிவுக்கு எதிரி உள்ள இருக்கையில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் பெயர் திரு.தங்கதுரை என்றும் அவர் இளநிலை உதவியாளராக இருப்பதாகவும், அவர் 16, 18 மற்றும் 19 வது வார்டுகளின் வரி வசூலிப்பாளராக இருந்து வருவதாக கூறினார். அவரிடம் பணமோ மற்றும் ஆவணங்களோ எதுவும் கைப்பறப்படவில்லை. அதற்கு அடுத்து அறையில் வருவாய் பிரிவில் வருவாய் ஆய்வாளர் திரு.P.ரங்கநாதன் அவர்களின் இருக்கை சோதனை

**(FIR content continues to the next page....)**

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.18/AC/2024/TVL u/s 106 BNSS., r/w. 7 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 Continuous...)**

செய்யப்பட்டது. அவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.1,250/- காணப்பட்டது. அது குறித்து அவரிடம் கேட்க, அவர் இன்று பணிக்கு வரும்போது செலவுக்காக வீட்டிலிருந்து எடுத்து வந்ததாக கூறினார். எனவே. அப்பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அந்த அறையில் இருந்த வருவாய் உதவியாளர் திரு.S.சீனிவாசன், வருவாய் உதவியாளர் திருமதி.சத்தியகலா என்பவர்கள் பணியில் இருந்தார்கள். அவர்களுடைய இருக்கையை சோதனை செய்தபோது கைப்பற்றக்கூடிய பணமோ அல்லது ஆவணங்களோ எதுவும் இல்லை. மேலும் அந்த அறையில் வருவாய் உதவியாளர் திரு.B.சாத்ராக் என்பவர் இருக்கையை சோதனை செய்தபோது, கைப்பற்றக்கூடிய பணமோ அல்லது ஆவணங்களோ எதுவும் இல்லை. மேலும் அவரை சோதனை செய்தபோது அவருடைய கைப்பையில் ரூ.500/- காணப்பட்டது. அது குறித்து அவரிடம் கேட்க, அவர் இன்று பணிக்கு வரும்போது செலவுக்காக வீட்டிலிருந்து எடுத்து வந்ததாக கூறினார். எனவே. அப்பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதற்கு அடுத்து அறையான பொறியாளர் பிரிவு அறையில் திரு.M.ரஞ்சன். உதவியாளர் மற்றும் திருமதி.S.ஜெயசித்ரா, தட்டச்சர் (M/s. Thukkaram Enterprises) ஆகியோர் இருந்தார்கள். அவர்கள் இருக்கைகளை சோதனை செய்தபோது, கைப்பற்றக்கூடிய பணமோ அல்லது ஆவணங்களோ எதுவும் இல்லை. திரு.M.ரஞ்சன். உதவியாளர் அவர்களை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.220/- இருந்தது, அதை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் திருமதி.S.ஜெயசித்ரா, தட்டச்சர் அவர்களை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.50/- இருந்தது, அதை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் நகராட்சி ஆணையர் அலுவலகத்திற்கு எதிரில் அமைந்துள்ள பொறியியல் பிரிவில் திருமதி.G.S.ஷோபனா, உதவி பொறியாளர் அவர்கள் இருந்தார். அவர்களை விசாரணை செய்தபோது, அவர்களது பணியானது கட்டிட பணி மேற்பார்வையாளர் என தெரிவித்தார். மேலும் அவரது அறையில் திரு.S.ஜான்கில்பர்ட், Technical Assistant (M/s. Thukkaram Enterprises), திரு.தர்மேஷ்பாலாஜி, Technical Assistant (M/s. Thukkaram Enterprises) மற்றும் செல்வி.B.ஷாலினி, Technical Assistant (M/s. Thukkaram Enterprises) ஆகியோர் இருந்தார்கள். அவர்களது இருக்கைகளை சோதனை செய்தபோது, கைப்பற்றக்கூடிய பணமோ அல்லது ஆவணங்களோ எதுவும் இல்லை. மேலும் திருமதி.G.S.ஷோபனா, உதவி பொறியாளர் அவர்களை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.680/- இருந்தது. அது குறித்து அவரிடம் கேட்க, அவர் இன்று பணிக்கு வரும்போது செலவுக்காக வீட்டிலிருந்து எடுத்து வந்ததாக கூறினார். எனவே. அப்பணத்தை அவரிடமே

**(FIR content continues to the next page....)**

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.18/AC/2024/TVL U/s 106 BNSS., r/w. 7 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 Continuous...)**

திருப்பி கொடுக்கப்பட்டது. திரு.S.ஜான்கில்பர்ட், Technical Assistant என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.50/- இருந்து. அதை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திரு.தர்மேஷ்பாலாஜி, Technical Assistant அவர்களை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.1910/- இருந்தது. அது குறித்து அவரிடம் கேட்க, அவர் இன்று பணிக்கு வரும்போது செலவுக்காக வீட்டிலிருந்து எடுத்து வந்ததாக கூறினார். எனவே. அப்பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் செல்வி.B.ஷாலினி, Technical Assistant அவர்களை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.500/- இருந்தது. அது குறித்து அவரிடம் கேட்க, அவர் இன்று பணிக்கு வரும்போது செலவுக்காக வீட்டிலிருந்து எடுத்து வந்ததாக கூறினார். எனவே. அப்பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. முதல்மாடியின் வலது புறத்தில் உள்ள பொதுப்பிரிவு அறையை சோதனை செய்ய அதில் திரு.R.பழனி, கணக்கர் மற்றும் திரு.V.மணிமாறன், ஆவண பதிவறை எழுத்தர் ஆகியோர் பணியில் இருந்தனர். அவர்களது இருக்கையை சோதனை செய்தபோது, கைப்பற்றக்கூடிய பணமோ அல்லது ஆவணங்களோ எதுவும் இல்லை. திரு.R.பழனி, கணக்கர் அவர்களை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.1,000/- இருந்தது. அது குறித்து அவரிடம் கேட்க, அவர் இன்று பணிக்கு வரும்போது செலவுக்காக வீட்டிலிருந்து எடுத்து வந்ததாக கூறினார். எனவே. அப்பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. திரு.V.மணிமாறன், ஆவண பதிவறை எழுத்தர் அவர்களை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.2,500/- இருந்தது. அது குறித்து அவரிடம் கேட்க, அவர் சரியான விளக்கம் அளிக்காததால் அப்பணத்தை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. முதல் மாடியின் தெற்கு மூலையில் அமைந்துள்ள நகராட்சி ஆணையர் திருமதி.லதா அவர்களின் அறையை தணிக்கை செய்ய, கைப்பற்றக்கூடிய பணமோ அல்லது ஆவணங்களோ எதுவும் இல்லை. மேலும், இரண்டாவது மாடியில் உள்ள நகர அமைப்பு பிரிவு அறைக்கு சென்று சோதனை செய்தபோது, அங்கு திரு.குமரவேல், நகரமைப்பு ஆய்வாளர் அவர்கள் பணியில் இருந்தார். அவரது இருக்கையை சோதனை செய்தபோது, கைப்பற்றக்கூடிய பணமோ அல்லது ஆவணங்களோ எதுவும் இல்லை. அவருடைய இருக்கைக்கு பக்கத்தில் உள்ள இருக்கையில் அலுவலக இளநிலை உதவியாளர் திரு.J.சரத்பாபு அவர்களின் இருக்கை இருந்தது. அவரது இருக்கையை சோதனை செய்தபோது, கைப்பற்றக்கூடிய பணமோ அல்லது ஆவணங்களோ எதுவும் இல்லை. மேலும் அவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.590/- காணப்பட்டது. அது குறித்து அவரிடம் கேட்க, அவர் இன்று பணிக்கு வரும்போது செலவுக்காக வீட்டிலிருந்து எடுத்து வந்ததாக கூறினார். எனவே. அப்பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது.

**(FIR content continues to the next page....)**

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.18/AC/2024/TVL U/s. 106 BNSS., r/w. 7 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 Continuous...)**

நகரமைப்பு பிரிவுக்கு அருகில் உள்ள கணக்கெடுப்பு பிரிவானது பூட்டப்பட்டிருந்து. நகரமைப்பு ஆய்வாளர் திரு.குமரவேல் அவர்களிடம் அந்த அறையை திறக்க கேட்டபோது, இளநிலை உதவியாளர் திரு.J.சரத்பாபு அவர்களை அழைத்து, அந்த அறையை திறக்க சொன்னார். அதன்படி அந்த அறையை திறந்து பார்த்தபோது, அந்த அறையின் ஸ்டீல் ரேக்கில் நகரமைப்பு பிரிவு தொடர்பான ஆவணங்கள் அடிக்கி வைக்கப்பட்டிருந்தன. போலீசார் உதவியுடன் அந்த அறையினை சோதனை செய்தபோது, இரும்பு ரேக்கின் அடியில் இரண்டு 500 ரூபாய் கட்டுகள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை கண்டறியப்பட்டது. அந்த இரண்டு ரூபாய் கட்டுக்களையும் எடுத்து எண்ணிப்பார்த்தபோது, அதில் மொத்தம் ரூ.1,00,000/- (500x200) இருந்தன. அதற்கு அடுத்து இருந்த ரேக்கின் அடியில் பணம் சுருட்டி போடப்பட்டிருந்தது. அதனை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.6,000/- (500x12) இருந்தன. அந்த அறையில் கண்டறியப்பட்ட ரூ.1,06,000/- பணத்தை குறித்து திரு.சரத்பாபு அவர்களிடம் கேட்டபோது, தனக்கு அந்த பணம் குறித்து எதுவும் தெரியாது என தெரிவித்தார். மேலும் அந்த பணம் குறித்து நகரமைப்பு ஆய்வாளர் திரு.குமரவேல் அவர்களிடம் கேட்டபோது, இந்த பணம் அந்த அறையில் யார் வைத்தது என்ற விவரம் தனக்கு தெரியாது என்று கூறினார். மேற்படி பணத்தை வழக்கின் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இரண்டாம் மாடியில் இருந்த உணவு அருந்தும் அறைக்கு அருகில் இருந்த பதிவு அறை பூட்டப்பட்டிருந்தது. அந்த அறையின் சாவி குறித்து ஆவண பதிவறை எழுத்தர் திரு.மணிமாறன் அவர்களிடம் கேட்டபோது, அந்த அறையின் சாவியானது இரவு காவலராக பணிபுரிந்து வரும் திரு.ராஜேஷ்கண்ணா என்பவரிடம் உள்ளதாக கூறினார். அந்த அறையில் வருவாய்துறை, பொறியியல் பிரிவின் பழைய ஆவணங்கள் அடிக்கி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். திரு.ராஜேஷ்கண்ணன் என்பவர் அந்த அறையின் சாவியை கொண்டு வந்து திறந்து விட்டார். அந்த அறையில் இரும்பு பீரோக்கள் மற்றும் ஸ்டீல் ரேக்குகளில் ஆவணங்கள் அடிக்கி வைக்கப்பட்டிருந்தன. அந்த அறையின் மூலையில் இருந்த ஸ்டீல் பீரோவில் உள்ள லாக்கரில் ஒரு கருப்பு பாலீத்தீன் பையில் இரண்டு கட்டுகளாக பணம் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. அதனை எடுத்து எண்ணிப்பார்க்க அதில் மொத்தம் ரூ.60,000/- (500x120) இருந்தன. அந்த பணம் குறித்து திரு.ராஜேஷ்கண்ணன் அவர்களிடம் கேட்டபோது, தனக்கு அது குறித்து எதுவும் தெரியாது என கூறிவிட்டார். மேலும் அந்த பணம் குறித்து ஆவண பதிவறை எழுத்தர் திரு.மணிமாறன் அவர்களிடம் கேட்டபோது, இந்த பணம் அந்த அறையில் யார் வைத்தது என்ற விவரம் தனக்கு தெரியாது என்று கூறினார். மேற்படி பணத்தை வழக்கின்

**(FIR content continues to the next page....)**

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.18/AC/2024/TVL U/s. 106 BNSS., r/w. 7 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 Continuous...)**

விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி பணம் ரூ.1,66,000/-யை குறித்து பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையர் திருமதி.லதா அவர்களிடம் கேட்டபோது, தனக்கு அந்த பணம் குறித்து எதுவும் தெரியாது என தெரிவித்தார். மேலும் திடீர் சோதனையின்போது நகராட்சி அலுவலகத்தில் இருந்த ஒப்பந்ததாரர்கள் 1) திரு.அனந்தசயனன், த/பெ.அரியாபிள்ளை, எண்.13 வி.கே.அவென்யூ, சக்தி நகர், மாலயம்பாக்கம், சென்னை என்பவரை விசாரணை செய்தபோது, தான் நியாய விலைக் கடை மற்றும் மருத்துவமனை கட்டுவது தொடர்பாக ஒப்பந்தம் எடுத்து, கட்டிடங்களை கட்டி முடித்துவிட்டதாகவும், இன்று மாலை பூவிருந்தவல்லி நகராட்சி ஆணையர் திருமதி.லதா அவர்கள் மேற்படி கட்டிடங்களை ஆய்வு செய்துவிட்டு, அலுவலகத்திற்கு வந்தபோது, தானும் நகராட்சி அலுவலகத்திற்கு வந்ததாக தெரிவித்தார். அவரை சோதனை செய்தபோது ரூ.6,500/- இருந்தது. அது குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, சரியான விளக்கம் அளிக்காததால் நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்களுக்கு லஞ்சமாக கொடுக்க எடுத்து வந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. 2) திரு.ராஜேஷ், த/பெ. கருணாகரன், எண்.50, ASR city. சக்தி நகர், மாலயம்பாக்கம், சென்னை என்பவரை விசாரணை செய்தபோது, தான் நகராட்சியில் ஒப்பந்த பணிகளை செய்து வருவதாகவும், பணி தொடர்பான புகைப்படத்தை கொடுப்பதற்காக நகராட்சி அலுவலகத்திற்கு வந்ததாக தெரிவித்தார். அவரை சோதனை செய்தபோது ரூ.9,500/- இருந்தது. அது குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, சரியான விளக்கம் அளிக்காததால் நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்களுக்கு லஞ்சமாக கொடுக்க எடுத்து வந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. 3) திரு.சரவணன், த/பெ. மாரிமுத்து. எண்.9/146, அக்ரகாரம் மேட்டுத்தெரு, ராம்தாஸ் நகர், அய்யப்பன்தாங்கல், சென்னை என்பவரை விசாரணை செய்தபோது, தான் வெங்கடேஸ்வரா கன்ட்செக்செனில் மேற்பார்வையாளராக பணிபுரிவதாகவும், ஒப்பந்த பணிகள் தொடர்பாக நகராட்சி அலுவலகத்திற்கு வந்ததாக தெரிவித்தார். அவரை சோதனை செய்தபோது ரூ.5,000/- இருந்தது. அது குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, சரியான விளக்கம் அளிக்காததால் நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்களுக்கு லஞ்சமாக கொடுக்க எடுத்து வந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது மற்றும் 4) திரு.ரஞ்சித்குமார், த/பெ. பாஸ்கரன், எண்.B9, சுராஜ் பூளுபெல் அப்பார்ட்மெண்ட்ஸ், குட்வில் நகர், பழைய பெருங்களத்தூர், சென்னை என்பவரை விசாரணை செய்ய, தான் அடையாரில் உள்ள Abbundu கம்பெனியில் மேற்பார்வையாளராக பணிபுரிவதாகவும், பூவிருந்தவல்லி நகராட்சியில் கழிவுநீர் வடிகால்

**(FIR content continues to the next page....)**

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.18/AC/2024/TVL U/s 106 BNSS., r/w. 7 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 Continuous...)**

தொடர்பான பணிகளை செய்துவருவதாகவும், அது தொடர்பான வேலையாக நகராட்சி அலுவலகத்திற்கு வந்ததாக தெரிவித்தார். அவரை சோதனை செய்தபோது ரூ.7,000/- இருந்தது. அது குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, சரியான விளக்கம் அளிக்காததால் நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்களுக்கு லஞ்சமாக கொடுக்க எடுத்து வந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது, 5) திரு.ஆரோன் சாமுவேல், த.பெ. ஆரோக்கியநாதன், எண்.15, சேஷா நகர், பூவிருந்தவல்லி என்பவரை விசாரணை செய்தபோது, தான் பூவிருந்தவல்லி நகராட்சயில் ஒப்பந்த பணிகளை எடுத்து செய்து வருவதாகவும், முடிவு பெற்ற வேலைக்கான காசோலை பெறுவதற்காக நகராட்சி அலுவலகத்திற்கு வந்திருந்ததாகவும், தனக்கு வரவேண்டிய பணம் ரூ.14,27,829/-க்கு காசோலை எண்.328725 பெற்றுக்கொண்டதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்தபோது ரூ.4,200/- இருந்தது. அது குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, சரியான விளக்கம் அளிக்காததால் நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்களுக்கு லஞ்சமாக கொடுக்க எடுத்து வந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது, மேலும், விசாரணைக்காக அலுவலகத்தில் பராமரிக்கப்படும் வருகைப்பதிவேடுகள் அக்டோபர்/2024 மாதத்திற்கான 1) பொது சுகாதார பிரிவு, 2)பொது பிரிவு மற்றும் 3)வருவாய் பிரிவு ஆகியவை நகல் எடுத்து விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த சோதனையின்போது பூவிருந்தவல்லி நகராட்சி அலுவலகத்தில் 1)கணக்கெடுப்பு பிரிவு அறையில் கண்டறியப்பட்ட யாரும் உரிமைக்கோராத பணம் ரூ.1,06,000/-, 2)பதிவு அறையில் கண்டறியப்பட்ட யாரும் உரிமைக்கோராத பணம் ரூ.60,000/-, 3)திரு.V.மணிமாறன், ஆவண பதிவறை எழுத்தர் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2,500/-, 4)ஒப்பந்ததாரர் திரு.அனந்தசயனன் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.6,500/-, 5)ஒப்பந்ததாரர் திரு.ராஜேஷ், அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.9,500/- 6)திரு.சரவணன் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.5,000/- 7) திரு.ரஞ்சித்குமார் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.7,000/- மற்றும் 8) ஒப்பந்ததாரர் திரு.ஆரோன் சாமுவேல் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.4,200/- ஆக மொத்தம் பணம் ரூ.2,00,700/- சோதனையின்போது விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் கூட்டாய்வின்போது எடுக்கப்பட்ட பொருட்கள் அந்தந்த இடத்திலேயே வைக்கப்பட்டும், அலுவலகத்திற்கும், அலுவலகத்திலிருந்த கோப்புகள் மற்றும் பொருட்களுக்கும் எந்தவித சேதாரம் இன்றி சோதனை செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட திடீர் இருத்துறை கூட்டுத்தணிக்கையை ஒரு திடீர் கூட்டுத்தணிக்கை செயல்முறையாக, நான் சொல்ல சொல்ல

**(FIR content continues to the next page....)**

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.18/AC/2024/TVL U/s. 106 BNSS., r/w. 7 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 Continuous...)**

தலைமை காவலர் 12315 திரு.மணிகண்டன் அவர்களால், காவல் ஆய்வாளர் கொண்டுவந்த மடிக்கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டது. இந்த திடீ கூட்டுத்தணிக்கை செயல்முறையானது, 23.10.2024-ஆம் தேதி மாலை 5.45 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 24.10.2024-ஆம் தேதி அதிகாலை 2 மணிக்கு முடிக்கப்பட்டது. அதில் கையொப்பம் செய்யப்பட்டுள்ளவர்களான 1) திரு.மு.இ.இராமச்சந்திரமூர்த்தி, காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பப் பிரிவு, திருவள்ளூர். 2) திருமதி.S.மாலா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பப் பிரிவு, திருவள்ளூர். 3) திரு.R.லதா, நகராட்சி ஆணையர், பூவிருந்தவல்லி நகராட்சி, பூவிருந்தவல்லி, சென்னை-56. 4) திரு.N.குமரவேல், நகரமைப்பு ஆய்வாளர் பூவிருந்தவல்லி நகராட்சி, பூவிருந்தவல்லி, சென்னை-56. 5) திரு.V.மணிமாறன், ஆவண பதிவறை எழுத்தர், பூவிருந்தவல்லி நகராட்சி, பூவிருந்தவல்லி, சென்னை-56 6) திரு.ஜெ.சங்கர், தனி வட்டாட்சியர், நில எடுப்பு-அலகு-IV, நெடுஞ்சாலை, திருவள்ளூர்-1 மற்றும் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு), காஞ்சிபுரம்,

**Honoured Sir,**

I received the above Complaint, Proceedings and un-accounted cash Rs.2,00,700/- and records and Registered a case in Thiruvallur V&AC, Cr.No.18/AC/2024/TVL, U/s. 106 BNSS., r/w. 7 of The Prevention of Corruption (Amendment) Act, 2018 on 24.10.2024 at about 06.00 hrs. The original FIR, Complaint along with the Joint Surprise Check Proceedings of District Deputy Inspection Cell Officer, Statements, Self explanations, attested copy of office records and seized un-accounted/un-explained bribe amount Rs.2,00,700/- at Poonamallee Municipality Office during the Joint Surprise Check, are submitted before the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Thiruvallur and other copies are forwarded to superior officers concerned.

S. Mala 24/10/2024

**(S.MALA),**
Inspector of Police,
Vigilance and Anti-Corruptiion,
Thiruvallur.